

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4

அறிவிப்புகள்
2018–2019

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

**மானியக் கோரிக்கை எண். 4**

அறிவிப்புகள்
**2018 – 2019**


**வி.எம். ராஜலெட்சுமி**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்

## 1. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்துதல்.

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், சேலம், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடி இன மக்கள் அவர்களின் திறனுக்கேற்ற வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சுய உதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், தொழில் முனைவோர் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி மானியத்தில் 2018–2019 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

**மேற்படி திட்டங்களை செயல்படுத்த ரூ.10 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 2. ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு பயோ மெட்ரிக் வருகை முறையை அறிமுகப்படுத்துதல் (1324 விடுதிகள்).

இத்துறையின் கீழ் **1324** ஆதி திராவிடர் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் நல விடுதிகளில் மாணாக்கர் தங்கி கல்வி பயில்வதை உறுதி செய்யும் பொருட்டும், உணவுக் கட்டணச் செலவு கோரிக்கை (claims) மாணாக்கரின் வருகையின் அடிப்படையில் உள்ளதா என்பதை உறுதி செய்திட ஏதுவாகவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 1324 ஆதி திராவிடர் நல விடுதிகளிலும் பயோ மெட்ரிக் கருவிகள் ரூ.**4.50** கோடி செலவில் பொருத்தப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.4.50 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 3. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வேலூர் மாவட்டம் அரசமரத்துக்கொல்லை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் சேராமரத்துார் ஆகிய **2** அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நீலகிரி மாவட்டம் தேவாலா, விழுப்புரம் மாவட்டம் கிளாக்காடு மற்றும் தருமபுரி மாவட்டம் கலசப்பாடி ஆகிய **3** அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.**3.79** கோடி செலவில் நிலை உயர்த்தப்படும்.

**மேற்படி திட்டத்தினை செயல்படுத்த ரூ.3.79 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 4. வேலூர் மாவட்டம், ஏலகிரி வட்டத்தில் பழங்குடியினர் நல மாணவியர் விடுதி கட்டுதல்.

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 12 மாவட்டங்களில் 18 பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளை உள்ளடக்கிய வேலூர் மாவட்டத்தில் தற்போது இரண்டு பழங்குடியினர் நல மாணவர் விடுதிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. பழங்குடியின மாணவிகளுக்கென தனியாக இம்மாவட்டத்தில் விடுதிகள் ஏதுமில்லை. எனவே, பழங்குடியினப் பெண் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை, அத்தனாவூரில் 50 பழங்குடியின பள்ளி மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய பழங்குடியினர் நல மாணவியர் விடுதி ரூ.1.35 கோடி செலவில் துவங்கப்படும்.

**மேற்படி திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.35 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 5. மெய்நிகர் கலந்தாய்வு (Virtual Interactive Classroom) வகுப்புகள் நடத்திட நந்தனம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப்பள்ளியில் காணொலி மையம் தொடங்குதல்.

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வி மேம்பாட்டிற்காக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 57 பள்ளிகளில் ஏற்கனவே இருக்கின்ற Smart Class வகுப்புகளை Virtual Interactive Class Room (VICR) ஆக மேம்படுத்தி, சென்னை மாவட்டம் நந்தனம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளியில் Master Virtual Class Room வகுப்புகள் நடத்துவதற்கான மையம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 6. பழங்குடியினப் போட்டித் தேர்வாளர்கள் அனைத்துப் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் பத்து மாவட்டங்களில் இலவச பயிற்சி மையம் அமைத்தல்.

வேலை வாய்ப்பற்ற பழங்குடியின மக்கள் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலையில் சேர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திட ஏதுவாக, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** விழுப்புரம், நாமக்கல், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு இலவச பயிற்சி மையம் வீதம் 10 இலவச பயிற்சி மையங்கள் ரூ.1 கோடி செலவில் துவங்கப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 7. ஆதி திராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டை மேம்படுத்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்.

இத்துறையின் கீழ் இயங்கும் ஆதி திராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்காக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** முதற்கட்டமாக திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு ஆதி திராவிடர் நலப் பள்ளியை தெரிவு செய்து திருநெல்வேலி மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும் (Centre of Excellence in Academic), சேலம் மாவட்டத்தில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (Centre of Excellence in Sports) ஏற்படுத்தி, அப்பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.50 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டும்.**

## 8. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டை மேம்படுத்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்.

இத்துறையின் கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்காக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு பள்ளியை தெரிவு செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விளையாட்டு திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (Centre of Excellence in Sports), கோயம்புத்தூர் மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும் (Centre of Excellence in Academic) ஏற்படுத்தி அப்பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.50 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 9. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கரிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 106** அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கிடையே பல்வேறு விளையாட்டு போட்டிகள் பள்ளி / மாவட்ட / மாநில அளவில் நடத்திடவும், கலந்து கொள்ளும் ஆசிரியர் மற்றும் மாணாக்கருக்கு விளையாட்டு உபகரணங்கள், போக்குவரத்துச் செலவினம், சிற்றுண்டி, ஆசிரியருக்கு ஊக்கத்தொகை, மாணாக்கருக்கு பரிசு மற்றும் இதர செலவினங்கள் ரூ.43.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.43.20 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

**10. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கரிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்பு வித்தல் போட்டி, வினாடி–வினா, பகுப்பாய்வுத் திறன் போட்டிகள் நடத்துதல்.**

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வியோடு பிற துறைகளிலும் சிறந்து விளங்குவதற்காக அவர்தம் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** பள்ளி / மாவட்ட / மாநில அளவில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா மற்றும் பகுப்பாய்வுத் திறன் (Analytical) போன்ற போட்டிகள் நடத்திடவும், பங்குபெறும் மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து செலவினம், சிற்றுண்டி, ஆசிரியருக்கு ஊக்கத்தொகை, மாணாக்கருக்கு பரிசு மற்றும் இதர செலவினங்கள் ரூ.22.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.22.10 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

## 11. பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டப் பயன்களைப் பெற Online மூலம் விண்ணப்பிக்க இணையதள வசதி ஏற்படுத்துதல்.

பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையிலும், அவர்கள் அரசு அலுவலகங்களுக்கு செல்வதில் ஏற்படும் காலவிரயத்தை தவிர்த்திடவும், பயனாளிகள் தேர்வில் வெளிப்படைத் தன்மையை அறிந்து கொள்ளவும், பொருளாதார மேம்பாட்டிற்கான அவர்தம் முன்னுரிமையினை அறிந்து கொள்ளவும், ஒருவரே பல திட்டங்களின் கீழ் பயனடைவதைத் தவிர்க்கவும், தகுதியின் அடிப்படையிலும், முதுநிலைப்படி பயனாளிகளை தேர்ந்தெடுக்கவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,**

ஓர் இணையதளம் ரூ.8.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.8.50 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.**

வி.எம். ராஜலெட்சுமி
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்

"அனைத்து தரப்பு மக்களும் சாதி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து, வறுமையில் வாடுவோர் வளம் பெற்று, அனைத்துத் தரப்பு மக்களும் அச்சமின்றி வாழ்வதுதான் உண்மையான சுதந்திரம்."

– மாண்புமிகு புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்